**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 107/2023 |
| Deposition of Witness | : | PW– 7 |
| Name | : | விஜயலட்சுமி |
| Father Name | : | பொங்காளி |
| Village | : | கவுந்தம்பாடி |
| Taluk | : | பவானி |
| Age | : | 44 |

Accused Present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 26.09.2025

**முதல் விசாரணை**

1. நான் தற்போது ஈரோடு மவாட்டம், கோபி உட்கோட்டம், கவுந்தம்பாடி வட்ட ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 28.02.2023 ஆம் தேதி காங்கேயம் ஆய்வாளர் காவல் நிலைய பொறுப்பு ஊதியூர் காவல் நிலைய ஆய்வில் இருந்தபோது எனது பார்வைக்கு வைக்கப்பட்ட ஊதியூர் காவல் நிலைய குற்ற எண்.23/2023 சட்டப்பிரிவு 15(3), 420 Indian Medical counsel Act ன் கீழ் வழக்கு பதிவு செய்து வழக்கு கோப்பினை சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.மாடசௌந்திரபாண்டியன் எனது பார்வைக்கு வைத்தார். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. பின்னர் வழக்கு கோப்பினை 28.02.2023 ஆம் தேதி மதியம் 14.00 மணிக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கிருஷ்ணன் மற்றும் கோபாலக்கிருஷ்ணன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகஜரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **(மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3. பின்னர் இவ்வழக்கின் சாட்சிகளான மருத்துவர் கனகராணி மற்றும் அலுவலக கண்காணிப்பாளர் ஹரிகோபாலகிருஷ்ணன், அலுவலக கண்காணிப்பாளர் ரமேஷ் குமார்

ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவ இடத்தை பார்வையிட்டதில் இருந்தும், சாட்சிகளை விசாரணை செய்ததில் இருந்தும் நடந்த சம்பவம் உண்மை எனத் தெரிந்ததால் நிலையம் அழைத்து வந்து ஆஜர் செய்த எதிரி பிளஸ்சி (39) க/பெ.தேவசகாயம், சொப்னக்காடு, மூணாறு பேஸ்ட், இடிக்கி மாவட்டம், கேரளா தற்போது 2/665, நாகலிங்கபுரம், கொடுவாய், திருப்பூர் மாவட்டம் என்பவரை நிலையத்தில் வைத்து 28.02.2023 ஆம் தேதி மாலை 18.15 மணிக்கு கைது செய்தும், கைதிற்கான காரணத்தை அவரது நண்பரான வீட்டின் உரிமையாளர் மரகதம் என்பவருக்கு தகவல் தெரிவித்தும் நிலையம் ஆஜரானவருக்கு கைது குறிப்பாணையில் கையொப்பமும் பெறப்பட்டது. பின்னர் கைது பற்றியும், உச்ச நீதிமன்ற கட்டளைகளை பின்பற்றியும், எதிரிக்கு அடிப்படை மருத்துவபரிசோதனைக்கு உட்படுத்தியும் எதிரியை நிலைய பாராவசம் ஒப்படைக்கப்பட்டது. **(சாட்சிகள் கோவிந்தசாமி மற்றும் தமிழ்செல்வம் ஆகியோர்களிடம் இருந்து பெறப்பட்ட கடிதங்கள் இரண்டு அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆஜர் எதிரியின் பெயரில் உள்ள மருத்துவ லேப் டெக்னீசியன் கோர்ஸ் முடித்ததற்கான பாரத் சேவா சமாஜால் வழங்கப்பட்ட சான்றின் நகல் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

4. பின்னர் வழக்கின் புலன் விசாரணை நிலுவையில் இருப்பதால் எதிரியை தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

எனது காவல் நிலையத்தில் கனகராணி அவர்களால் கொடுக்கப்பட்ட புகார் தட்டச்சு செய்யப்பட்ட புகார் என்றால் சரிதான். எழுத்து பூர்வமான புகார் எதுவும் அ.சா.1 ஆல் கொடுக்கவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் நான்காவது வரியில் எழுத்து மூலமான புகாரின் விபரம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் இவ்வழக்கிற்கு பொறுப்பு ஆய்வளராக கடந்த 28.02.2023 ஆம் தேதி பொறுப்பு எடுத்துக்கொண்டேன் என்றால் சரிதான். 23.02.2023 ஆம் தேதி இவ்வழக்கு பற்றிய விபரம் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். 23.02.2023 ஆம் தேதி ஊதியூர் காவல் நிலையத்திற்கு பொறுப்பு ஆய்வளார் இல்லை என்றால் எனக்கு தேதி தற்போது ஞாபகம் இல்லை. குற்ற நிகழ்வு நாள் அன்று ஊதியூர் காவல் நிலையத்திற்கு பொறுப்பு

ஆய்வாளர் யார் என்றால் எனக்கு ஞபாகம் இல்லை. 28.02.2023 ஆம் தேதி இவ்வழக்கு சாட்சிகள் 1, 2, 3 ஆகியோர்கள் சந்தித்தார்கள். அதற்கு முன்பு அ.சா.1,2,3 ஆகியோர்கள் என்னை சந்திக்கவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் ஊதியூர் தலைமைக்காவல் நிலைய காவலர் ரவி அவர்கள் முன்னிலையில் கிளினிக்கை மூடி முத்திரையிட்டதாக குறிப்பு உள்ளது என்றால் சரிதான. ஆனால் தேதி குறிப்பிடவில்லை. 23.02.2023 ஆம் தேதி தலைமைக்காவலர் ரவி அங்கு செல்வதற்கு யார் அனுமதி கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. நான் அனுமதி கொடுக்கவில்லை. 23.02.2023 ஆம் தேதி சுகம் கிளினிக்கை பார்வையிட நான் அனுமதி கொடுத்தேனா என்றால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. 23.02.2023 ஆம் தேதி அ.சா.1 முதல் 3 வரையானவர்கள் காவல் நிலையம் வந்தார்களா என எனது விசாரணையில் நான் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். 23.02.2023 ஆம் தேதி நான் யாரையும் சந்திக்கவில்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. 23.02.2023 ஆம் தேதியன்று மருத்துவமனைக்கு சீல் வைத்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. 28.02.2023 ஆம் தேதி காவல் நிலையத்தில் புகார் எதிரியுடன் வந்து அ.சா.1 ஆல் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். 28.02.2023 ஆம் தேதி இவ்வழக்கிற்கான பொறுப்பு எடுத்துக்கொண்டு 28.02.2023 ஆம் தேதியன்றே ஆய்வாளர் காமராஜ் அவர்களிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டேன் என்றால் சரிதான். 28.02.2023 ஆம் தேதிக்கு பின்பு நான் இவ்வழக்கு கோப்பில் எவ்வித விசாரணையும் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சுகம் கிளினிக்கை உள்ளே சென்று பார்வையிட்டேன் என்றால் சரிதான். அதன் அளவுகள் மாதிரி வரைபடத்தில் குறிப்பிடவில்லை. மாதிரி வரைபடத்தில் கிளினிக்கின் உள்பகுதியை குறிப்பிடாமல் அக்கம் பக்கம் கடைகளை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். உள் பகுதியில் எத்தனை அறைகள் இருந்தது என்றால் அதுபற்றி நான் மாதிரி வரைபடத்தில் குறிப்பிடவில்லை. தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. மருத்துவ ஆய்வாளர் கனகராணி குழுவினர், தலைமைக்காவலர் ரவி ஆகியோர்கள் 23.02.2023 ஆம தேதியே மருத்துவமனையை பூட்டி சீல் வைத்ததாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பு உள்ளது என்றால் சரிதான். மருத்துவ ஆய்வாளர் 23.02.2023 ஆம் தேதி பூட்டப்பட்ட மருத்துவமனையை 28.02.2023 ஆம் தேதி யார் திறந்தது என்றால் அதுபற்றி தெரியாது. நான் சம்பவ இடம் சென்று பார்க்கும்போது அந்த கிளினிக் மூடி முத்திரையிடப்பட்டிருந்தது. மூடி முத்திரையிடப்பட்டிருந்த கிளினிக்கிற்குள் எப்படி உள்ளே சென்று பார்த்தேன் என்றால் அதுபற்றி எனக்கு ஞாபகம் இல்லை. நான் சுகம் கிளினிக்கின் உள்ளே சென்று பார்வையிடவில்லை என்றால் சரிதான். சீல் வைக்கப்பட்டிருந்ததால் உள்ளே

செல்லவில்லை. சுகம் கிளினிக்கிற்குள் என்ன இருந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மருத்துவ இணை இயக்கநரால் சீல் வைக்கப்பட்ட மருத்துவமனையை யாருடைய அனுமதியுடன் உள்ளே சென்று பார்த்தோம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினேனா என்றால் இல்லை. விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வாக்குமூலத்தில் எதிரியின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். எதிரி என்னிடம் எவ்வித வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் மருத்துவ சிகிச்சையில் இருந்த நபர்களையோ, தனிநபர் சாட்சிகளையோ விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். மருத்துவ இணை இயக்குநர் தனிநபருக்கு எதிரி சிகிச்சை அளித்ததாக எனது விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அந்த நபர் பெயர், விலாசத்தை நான் விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் அ.சா.1 பெயர் குறிப்பிட்டு என்னிடம் சொல்லவில்லை. எத்தனை பேருக்கு சிகிச்சை அளித்தார்கள் என்று விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் நிறையா நபர்களுக்கு சிகிச்சை அளித்ததாக சொன்னார். எண்ணிக்கை எனக்கு குறிப்பாக சொல்லவில்லை. நான் எவ்வித சான்றாவணங்களும், சான்று பொருட்களும் இவ்வழக்கில் கைப்பற்றவில்லை என்றால் விசாரணையின் போது என்னிடம் எதுவும் ஒப்படைக்கவில்லை. 23.02.2023 ஆம் தேதியும், 28.02.2023 ஆம் தேதியும் மருத்துவர் தமிழ்செல்வனை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன் என்றால் 23.02.2023 ஆம் தேதி பற்றி எனக்கு தெரியாது. 28.02.2023 ஆம் தேதி நான் விசாரிக்கவில்லை. தமிழ்செல்வனும், கோவிந்தசாமியும் என்னிடம் எவ்வித புகார் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் அவர்களை விசாரிக்கவில்லை. பார்வை மகஜர் சாட்சியிடம் நான்தான் கையொப்பம் பெற்றேன் என்றால் சரிதான். வேறு யாரும் அவர்களிடம் பார்வைமகஜரில் கையொப்பம் வாங்கவில்லை. 23.02.2023 ஆம் தேதி மருத்துவர் தமிழ்செல்வம் பணியில் இருந்ததாக புகாரிலும் சாட்சி வாக்குமூலத்திலும் குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான். பதிவு செய்த மருத்துவர் நோயாளிகளுக்கு ஊசி போடவும் மருந்து போடவும் மருத்துவ கவுன்சில் சட்டப்படி உரிமையுள்ளது என்றால் சரிதான். மருத்துவர் ஒருவர் பணியில் உள்ளபோது காவலர் முன்னிலையில் எவ்விதமான அரசு உத்தரவும் இல்லாமல் கிளினிக்கை பூட்டி சீல் வைக்கமுடியாது என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலர் அங்கு வந்தாரா என்று விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் என்னிடம் குறிப்பிட்டு சொல்லவில்லை. நான் விசாரணைக்கு சென்றபோது மருத்துவமனையில் மருத்துவர் பிளஸ்சி என்ற பெயர் பலகை கிளினிக்கில் காணப்படவில்லை என்றால் இல்லை. இவ்வழக்க சம்பந்தமாக அந்த ஊர் கிராம நிர்வாக அலுவலரை எந்த விசாரணையும் செய்யவில்லை என்றால் சரிதான்.

27.02.2023 ஆம் தேதி அ.சா.1 கணகராணி எங்கள் காவல்நிலையத்தில் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். மருத்துவமனை அளவுகள், அறைகள் என்னென்ன அளவுகள் இருந்தது என்பதும், அங்கு என்னென்ன பொருட்கள் இருந்தது என்பதும் நான் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். சாட்சி 1, 2, 3 ஆகியோர்களை எங்கு வைத்து விசாரித்தேன் என்றால் காவல் நிலையத்திலும், சம்பவ இடத்திலும் விசாரித்தேன். இரண்டு முறை விசாரித்துள்ளேன். ஆனால் ஒரு வாக்குமூலம் மட்டும் பதிவு செய்யப்பட்டுள்ளது. எத்தனை மணிக்கு கூட்டிட்டு போய் விசாரித்தேன் என்றால் சுமார் 3.00 மணிக்கு மேல் இருக்கும். காவல் நிலையத்தில் எத்தனை மணிக்கு விசாரித்தேன் என்றால் சுமார் மாலை 4.00–6.00 மணி இருக்கும். காவலர் ரவியை விசாரித்து நான் வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் இல்லை. 08.04.2023 ஆம் தேதியன்று நான் யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் விசாரித்த சாட்சிகளின் வாக்குமூலம் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் சம்பவ இடம் சென்று பார்வை மகஜர் தயாரிக்கவில்லை என்றும், எங்கள் காவல் நிலையத்தைச் சேர்ந்த ஒரு ஆண் காவலர்தான் சம்பவ இடம் சென்று மகஜர் தயாரித்தார் என்றும் வழக்கிற்காக நான் சம்பவ இடம் சென்றதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் பொறுப்பாய்வாளர் என்பதால் ஊதியூர் காவல் நிலையத்தில் தட்டச்சு செய்யப்பட்ட சாட்சி வாக்குமூலத்தில் கையொப்பம் மட்டுமே செய்தேன் என்றும் சம்பவ சாட்சிகள் யாரையும் நான் விசாரிக்கவில்லை என்றும், எனது பகுதி புலன் விசாரணையை சரிவர செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2025.09.26 18:16:16 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்